**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 - 2016**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 3267 (எஸ்ஆர்ஐ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) ஆம் உறுப்புரை மற்றும் 3268 (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளிலுள்ள விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்கான நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,740 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 190 மில்லினானதுடன் அதில் ரூபா 21,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 யூன் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதி அமைச்சின் செயலாளரின் 2016 யூன் 15 இன் பீஎம்ஏ/டீ/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 10 மில்லியனைவிட அதிகமான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக உள்ளக கணக்காய்வாளரொருவர் வேலைக்கமத்தப்பட வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது அதனுடைய நடவடிக்கைகளை 2015 யூன் இல் ஐ.அ.டொலர் 190 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஆரம்பித்திருந்த போதிலும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் மீது முறையான கண்காணிப்பு பொறிமுறைகளை ஸ்தாபிப்பதற்காக உள்ளக கணக்காய்வாளரை வேலைக்கமர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடன் இல. 3267 | 76.00 | 11,096.00 | 970.73 | 2.90 | 437.20 | 2.90 | 437.20 |
| கடன் இல. 3268 | 74.00 | 10,804.00 | 1518.33 | 3.60 | 526.85 | 6.20 | 859.35 |
| இலங்கை அரசாங்கம் | 40.00 | 5,840.00 | 560.94 | 1.70 | 244.88 | 2.20 | 316.42 |
| | **190.0** | **27,740.00** | **3,050.00** | **8.20** | **1,208.93** | **11.30** | **1,612.97** |

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,550 மில்லியன் ஒதுக்கீடு தொடர்ச்சியாக ரூபா 3,050 மில்லியனாக திருத்தயமைக்கப்பட்டிருந்தது. அதில் திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 40 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,208.93 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின், இறுதியளவில் நிகழ்ச்சித்திட்ட வேலைகளின் 19 சதவீத ஒட்டுமொத்த பௌதீக இலக்கினை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய பௌதீக இலக்கு தொடர்ச்சியாக 12.9 சதவீதமாக சீரமைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பௌதீக இலக்கின் உள்ளபடியான அடைதலானது வேலைகளின் 7.59 சதவீதமாக மாத்திரமிருந்தது. பல நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் கால்தாமதத்துடன் வழங்கப்பட்டமையால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத்திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளை மீளாய்வாண்டின் இறுதியளவில் அடையமுடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையால், குறித்த திகதிகளில் வேலைகளின் பூர்த்தியாக்கல் மீதான இடர்கள் விலை தளம்பல்களால் கிரயத்தை மீளலின் சாத்தியத்தன்மை கணக்காய்வில் அடையமுடியாதிருந்தது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மேல் எலஹெற கால்வாயின் நிர்மாண வேலைகள் மீது அடையப்பட வேண்டியிருந்த 30 சதவீத எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்கானது தாமத்துடன் 2016 நவம்பர் 21 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டமையால் அடையமுடியாதிருந்தது. ஆகையால் வேலைகளின் 3.2 சதவீத வேலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ii) ரூபா 805.32 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான நேபாடகஹவத்த வரையிலான வெமிடில்லா லெம்ற் வங்கி பிரதான கால்வாயின் 5.25 கிலோ மீற்றர் நீளமான முன்னேற்றங்கள், புதிய கால்வாயின் நிர்மாண வேலைகள் ஒப்பந்தத்தின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 சதவீதமான வேலைகள் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2016 நவம்பர் 21 இலேயே ஒப்பந்தம் வழங்கப்பட்டமையால் 2.3 சதவீதமான வேலைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மினிப்பே லெபற் வங்கி கால்வாய் - நிலை – 01 இன் 30.14 கிலோ மீற்றர்கள் நீளமான புனரமைப்பு வேலைகளில் பூர்த்தி செய்யப்ப எதிர்பார்க்கப்பட்ட 30 சதவீத வேலைகள் 2016 செப்தெம்பர் 07 இலேயே ஒப்பந்தம்

வழங்கியிருந்தமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்குகளை விட பின்னோக்கியிருந்தது.

(ஆ) மஹாகித்துல இன்லெற் கால்வாய், மஹாகித்துல மற்றும் மஹாகித்துல நீர்த்தேக்கங்களின் நிர்மாண வேலைகள் ஊட்டி கால்வாய்களுடனான நேபாடஹவத்தவிலிருந்து மஹாகித்துல நீர்த்தேக்கம் வரையிலான 17.25 கிலோ மீற்றர்களின் பிரதான கால்வாயின் நிர்மாண வேலைகள் மற்றும் மினிப்பே லெபற் வங்கி கால்வாய் நிலை - 02 மற்றும் நிலை - 03 இன் 19.76 கிலோ மீற்றர் நீளமான புனரமைப்பு வேலைகள் போன்றன 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் கீழும் 30 சதவீதம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவ்வேலைகள் மீது கூறு ஆவணங்களின் தயார்படுத்தலுடன் தொடர்புடைய வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அத்தகைய வேலைகளின் 50 சதவீதமான மினிப்பே அனிகற் மற்றும் நீர்க்கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகளின் முகப்பை அதிகரிப்பதற்கான ஒப்பந்தம் மீதான கூறு ஆவணங்களின் தயார்படுத்தல்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 1,327.87 மில்லியன் தொகையான செலவினம் பொதுத்திறைசேரியால் பராமரிக்கப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ரூபா 1,576.66 மில்லியனான அச் செலவீனத்துடன் இணங்கியிருக்கவில்லை. ரூபா 332.50 மில்லியன் தொகையான நேரடிச் செலவீனங்கள் மீது பொதுத்திறைசேரியின் பதிவேடுகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்புப் பிரிவால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 83.71 மில்லியன் தொகையான செலவீன மீதியை பதிவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் மேற்குறிப்பிடப்பட்ட வித்தியாசத்திற்கான பிரதான காரணமாகவிருந்தது.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பதவியணியினரின் 177 பதவியணி நிலைகளை கொண்டிருக்கவேண்டியிருந்ததுடன் அதில் பிரதம செயற்திட்ட பணிப்பாளர்கள், செயற்திட்ட பொறியியலாளர்கள் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர்களை உள்ளடக்கிய 71 பதவிகள் 2016 திசெம்பர் 31 இல் ஒரு வருடத்திற்கு மேலாக வெற்றிடமாக இருந்தது.

(ஆ) 2016 மார்ச் இல் செயற்திட்டத்தால் பதிற்கடமை அடிப்படையில் 02 கணக்காளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் 2016 யூன் 17 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நிலைகளில் உள்ளடக்கப்பட்டிராத அத்தகைய பதவிகளுக்காக ரூபா 1.12 மில்லியன் கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.